முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

**மகான் பொய்கை ஆழ்வார் அருளிய ஒளி சூட்சும நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

11.01.2019, வெள்ளிக்கிழமை

1. **அறமெனும் திருவழி கண்டநல்**
**அரங்கனே மாதவ சித்தனே**
**வரமெனும் உன் ஆசி தீட்சை**
**வாழ வைக்கும் மக்களை என்று கூறி**

2. கூறியே ஒளி சூட்சும நூலை
குறையிலா **விளம்பி சிலை திங்கள்**
**தெரியவே இருபானேழ் திகதி புகர் வாரம்**
**(விளம்பி வருடம் மார்கழி மாதம் 27ம் நாள் 11.01.2019, வெள்ளிக்கிழமை)**
**தேசிகனுக்கு பொய்கை ஆழ்வார் யானும்**

3. யானும் உலகநலமுற உரைப்பேன்
உயர்வான அறுபத்துமூவர் பெருமக்களை
ஞானவழித் தொடர்ந்து ஆழ்வார்களும்
நம்பகமான அரங்கன் வழிகாட்டி உரைப்பேன்

4. உரைக்கவே உயர் சக்தி குரு
ஊழை அகற்ற வந்த ஞானகுரு
கறை போக்கி மக்களினை இனி
கடைத்தேற்ற வந்த யோக குரு

5. குருவரங்கன் சொல் செயல்களை
குவலயமே வேதமாக ஏற்றிட
திருவருள் எளிதாக கிட்டிடும்
தேவைகள் யாவும் பூர்த்தி ஆகும்

6. ஆகவே அரங்கன் சீடர்கட்கும்
அருளுவேன் கல்ப மூலிகையை
வகைபட சிவசக்தி இலையாம்
வில்வம் வேம்பு இரு இலை வீதம்

7. வீதம் ஒரு மண்டலம் உண்டு
விடாது சைவ நெறிபடவே
ஆதரவாய் அரங்கன் பேர் சொல்லி
அருட்சீடர்கள் உண்டு வருக

8. வருகவே மாயை சிக்கலுடன்
வக்கிர கொடூர புத்திகளெல்லாம் நெருங்கா
மாறுதலாகி தயை சிந்தைபட
மனபக்குவம் யாவரும் அடைந்து

9. அடைந்து அரங்கன் தேடல் வழி
அனைவரும் அரங்க சபை மூலம்
தடையிலா சித்தி பெறுவர்
தவசியாகவே வலம் வருவர்

10. வருகவே சீடர் பெருமக்களே
வருகின்ற அவதார தினம் தொட்டு
முருகப்பெருமான் சூட்சும தேகம்
மூலசக்தியாக அரங்கனுள் அருளி

11. அருளி அற்புதம் நடத்த இருக்க
ஆக்கை நிலைகள் மாறும்
அருள் சீடர்களே நம்பகம் கூட்டி
அணுகி வணங்கிட பூஜித்திட வரம் கிட்டும் ஒளி சூட்சும நூல் முற்றே.

–சுபம்–

முருகப்பெருமான் துணை

**மகான் பொய்கை ஆழ்வார் அருளிய ஒளி சூட்சும நூலின் சாரம் :**

அறம் என்கிற உயர்வான ஞானவழிதனை கண்டிட்ட நல் ஞானி ஆறுமுக அரங்கமகா தேசிகனே, மாதவங்கள் செய்து வெற்றி கண்டிட்ட மாதவ சித்தனே உமது தீட்சை உபதேசங்களெல்லாம் மக்களுக்கு வரங்களாக மாறி கலியுக மக்களை வாழ வைக்குமப்பா என்று கூறியே அரங்கா உலகமெலாம் உமது புகழைக் கூறி உலக நலம் கருதி **விளம்பி வருடம் மார்கழி மாதம் 27ம் நாள் 11.01.2019, வெள்ளிக்கிழமையான** இன்றைய தினமதனிலே ஒளி சூட்சும நூல்தனையே உலக நலம் கருதி உரைக்கின்றேன் பொய்கை ஆழ்வார் யானும்.

அறுபத்து மூன்று நாயன்மார்களைத் தொடர்ந்து பன்னிரண்டு ஆழ்வார்களும் நம்பகம்மிக்க கலியுக மகா ஞானி அரங்கனின் வழியைக் காட்டி உரைக்கின்றோம்.

முருகப்பெருமானின் அவதாரமாகிய அரங்கமகா தேசிகனே உயர் ஞான சக்தி கொண்ட குரு ஆவார். மக்களின் ஊழ்வினையை அகற்றி காக்க வந்துதித்த அவதார ஞானகுரு ஆவார். மக்களிடம் கறையாக உள்ள குற்றங்களைப் போக்கி அவர்களை கடைத்தேற்றி காத்திடவே வந்துதித்த யோககுருவும் ஆவார். சற்குரு ஆறுமுக அரங்கனின் சொல்செயல்களை உலகமெலாம் வேதமாக ஏற்று பின்பற்றி வந்திட்டால், உலக மக்களுக்கு திருவருள் மிக எளிதாக கிடைத்திடும், அவர்களது தேவைகள் யாவும் பூர்த்தியாகும்.

உத்தம மகா ஞானி ஆறுமுக அரங்கனின் சீடர்களுக்கு கல்பமூலிகை ஒன்றினைச் சொல்கிறேன். சிவசக்தி இலை எனப்படும் வில்வத்தின் இலையையும் வேம்பின் இலையையும் இரு இலைகள் வீதம் ஒரு மண்டலம் (48 நாட்கள்) சாப்பிட்டு வருவதுடன் உயிர்க்கொலை தவிர்த்து புலால் மறுத்து சுத்த சைவ உணவை உட்கொண்டு தினம்தினம் மறவாமல் அரங்கனின் திருநாமங்களை சொல்லி ஜெபித்து பின் இலைகளை உண்டு வர வேண்டுமப்பா.

இவ்விதமே செய்து வர, மக்களை மயக்கும் மாயையின் பிடியிலிருந்து விடுபடுவதுடன், வக்கிர கொடூர புத்திகள் எல்லாம் மாறுதல் அடையும், தயைசிந்தையாக நடந்து மனப்பக்குவம்தனை அனைவரும் அடைந்து அரங்கனின் உபதேசத்தினை பின்பற்றி நடந்து அரங்கனின் ஞானசபையாம் ஓங்காரக்குடில் மூலம் தடைகள் இன்றி சித்தியடைவார்கள், உலகினில் தவசிகளாக வலம் வருவார்கள்.

ஆதலினால் ஆறுமுக அரங்கனின் சீடர்களே வருகின்ற அவதாரதினம் தொட்டு 13.01.2019, ஞாயிறு முதலாக முருகப்பெருமானின் சூட்சும தேகம் மூலசக்தியாக அரங்கனுள் வெளிப்பட்டு அற்புதம் நடத்த இருக்கின்றபடியால் அரங்கனின் உடல் நிலைகள் விரைந்து மாற்றம் அடையும். அருட்சீடர்களே அரங்கன் மீது சந்தேகம் கொள்ளாமல் நம்பிக்கையை அதிகப்படுத்தி அரங்கனை அணுகி வணங்கி பூஜைகள் செய்திட அவரவர்க்கும் சகல வரங்களும் கிடைத்திடுமப்பா என தமது ஒளி சூட்சும நூல் மூலம் உலகறிய உரைக்கின்றார் மகான் பொய்கை ஆழ்வார்.

–சுபம்–